வகுப்பு: 11

தேர்வு எண்

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023-24

## வரலாறு

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20X1=20

1. மெஹர்கார் -------- பண்பாட்டுடன் தொடர்புடையது.
அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம் இ) இடைக்கற்காலம் ஈ) செம்பு காலம்
2. சத்யமேவ ஜெயதே என்ற சொற்றொடர் எந்த நூலில் இருந்து பெறப்பட்டது.
அ) ரிக்வேதம் ஆ) சாம வேதம் இ) முண்டக உபநிடதம் ஈ) சதபதபிராமணம்
3. புத்தர் தனது முதல் போதனை ------- இல் நிகழ்த்தினார்.
அ) சாஞ்சி ஆ) வாரணாசி இ) சாரநாத் ஈ) உஜ்ஜயினி
4. ------- என்ற விசாக தத்தரின் நாடகம் சந்திரகுப்தர் பற்றியும், அவர் மகதப் பேரரசின் அரியணை ஏறியது பற்றியும் கூறுகிறது?
அ) முத்ராராட்சசம் ஆ) ராஜதரங்கினி இ) அர்த்தசாஸ்திரம் ஈ) இண்டிகா
5. கீழ்கண்டவற்றில் எந்த இணை தவறானது?
i) தலையாலங்கானம் – நெடுஞ்செழியம்
ii) பட்டினப்பாலை – உருத்திருக்கன்னனார்
iii) கஜபாகு – இலங்கை
iv) திருவஞ்சிக்களம் – சோழர்
அ) (i) ஆ) (ii) இ) (iii) ஈ) (iv)
6. சக சத்ரப்களில் மிகவும் புகழ் பெற்றவர்.
அ) மொக ஆ) ருத்ரதாமன் இ) அஸிப் ஈ) யசோவர்மன்
7. பொருத்துக.
அ) ஷேத்ரா – 1. தரிசு நிலம்
ஆ) கிலா – 2. மேய்ச்சல் நிலம்
இ) வாஸ்து – 3. பயிரிடக்கூடிய நிலம்
ஈ) கபசஹாரா – 4. குடியிருக்கத் தகுந்த நிலம்
அ) 2 1 4 3 ஆ) 4 3 2 1 இ) 3 1 4 2 ஈ) 1 4 3 2
8. ஹர்ஷர் கன்னோசியின் அரியணையை -------- இன் அறிவுரையின் படி ஏற்றுக் கொண்டார்.
அ) கிரகவர்மன் ஆ) அவலோகிதேஷ்வர போதிசத்வர்
இ) பிரபாகவர்த்தனர் ஈ) போனி
9. காம்போஜம் என்பது நவீன --------
அ) அஸ்ஸாம் ஆ) சுமத்ரா இ) ஆனம் ஈ) கம்போடியா
10. உலகப் புகழ்பெற்ற கஜீராஹோ கோவிலை கட்டியவர்கள்.
அ) ராஷ்டிரகூடர் ஆ) டோமர் இ) சன்டேளர் ஈ) பாமர்
11. சரியான கூற்றினை தேர்ந்தெடு.
அ) விஜயநகர அரசின் அரசர்கள் ஐந்து வம்சங்களாக சுமார் 300 ஆண்டுகள் ஆட்சி செய்தனர்
ஆ) ஆந்திர கடற்கரை பகுதிகளில் ஒரிசாவின் கஜபதி மற்றும் பாமினி அரசர்களிடையே கடும் போர் நடைபெற்றது
இ) அப்துர் ரசாக் ஒரு பாரசீகத் தூதுவராகக் கொச்சியிலிருந்து சாமரின் அவைக்கு வந்தார்
ஈ) பாமினி அரசர்கள் அதிக அளவில் தங்க நாணயங்களை பல்வேறு வகையான தெய்வங்களின் உருவங்களுடன் வெளியிட்டனர்.
12. கூன் பாண்டியன் என்று அழைக்கப்பட்டவர்.
அ) முதலாம் மகேந்திரவர்மன் ஆ) மாறவர்மன்
இ) நரசிம்மவர்மன் ஈ) சுந்தரபாண்டியன்
13. கூற்று : மத சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.
காரணம் : அவர்கள் சிலை வழிபாட்டை விமர்சித்தனர்.
அ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம்
ஆ) கூற்று தவறு, காரணம் தவறு
இ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்
ஈ) கூற்று தவறு, காரணம் சரி
14. கடைசிப் போரான காக்ரா போரில் பாபர் ------ எதிராக போரிட்டார்.
அ) ஆப்கானியர்களுக்கு ஆ) ராஜபுத்திரர்களுக்கு இ) துருக்கியர்களுக்கு ஈ) மராட்டியர்களுக்கு
15. பொருத்துக.
i) அர்க்காசல் – 1. ஔரங்கசீப்
ii) ஜும்மா மசூதி – 2. அக்பர்
iii) பாதுஷாஹி மசூதி – 3. ஷெர்ஷா
iv) புராணகிலா – 4. ஷாஜகான்
அ) 2 4 1 3 ஆ) 3 2 1 4 இ) 3 1 4 2 ஈ) 1 3 4 2

V/11/His/1

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

16. சிவாஜியின் ஆலோசனை சபை -------- என்று அழைக்கப்பட்டது?
அ) அஷ்டபிரதான் ஆ) அஷ்டதிக்கஜங்கள் இ) நவரத்தினங்கள் ஈ) பஞ்சபாண்டவர்கள்
17. வந்தவாசிப் போர் ---------- க்கு இடையே நடைபெற்றது.
அ) அயர்கூட் மற்றும் லாலி ஆ) ராபர்ட் கிளைவ் மற்றும் லாலி
இ) அயர்கூட் மற்றும் புஸ்ஸி ஈ) ராபர்ட் கிளைவ் மற்றும் புஸ்ஸி
18. கீழ்கண்டவற்றுள் எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது.
அ) கங்காதர ராவ் - ஜான்சி
ஆ) ரகுஜி போன்ஸ்லே - நாக்பூர்
இ) ஷாஜி - சதாரா
ஈ) சிந்தியா - தோப்பூர்
19. வேலுநாச்சியார் -------- அரசருடைய மகள்.
அ) சிவகங்கை ஆ) புதுக்கோட்டை இ) இராமநாதபுரம் ஈ) பழவேத்தம்
20. வேதங்களை நோக்கிய திரும்புக – என்று முழக்கமிட்டவர்.
அ) இராஜா ராம் மோகன்ராய் ஆ) தயானந்த சரஸ்வதி
இ) விவேகானந்தர் ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

பகுதி - II

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14
வினா எண் 30–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21. பெருங்குளம் : சிறுகுறிப்பு வரைக.
22. ஜனபதங்களுக்கும், மகாஜனபதங்களுக்கும் இடையேயான வேறுபாட்டை கூறுக.
23. அலெக்சான்டரின் படையெடுப்பு எந்த வகையில் இந்திய வரலாற்றில் திருப்புமுனையாக அமைகிறது?
24. அலகபாத்தூண் கல்வெட்டுக் குறித்து கூறுக.
25. திருப்புறம்பியம் போரைப்பற்றி நீ அறிந்தது என்ன?
26. நாற்பதின்மர் அமைப்பு.
27. விஜய நகர அரசு யாரால் ஏற்படுத்தப்பட்டது? எதனால் அப்பெயர் வந்தது?
28. சிறுகுறிப்பு வரைக. அ) சௌத் ஆ) சர்தேஷ்முகி
29. 1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டத்தை விவரி.
30. கொங்கு பகுதியில் தீரன் சின்னமலையின் கிளர்ச்சிகள் பற்றி நீவிர் அறிவது யாது?

பகுதி - III 7x3=21

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.
வினா எண் – 40 க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

31. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
32. தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கை குறிப்பிடுக.
33. சோழ அரசர்களின் தலை சிறந்தவன் கரிகாலன்.
34. விக்கிரமசீலா பல்கலைக்கழகம் குறித்து சிறு குறிப்பு தருக.
35. எல்லோராவிலுள்ள கைலாசநாதர் குகைக் கோவில்.
36. முகமது துக்ளக்கின் சோதனைகள் தோல்வியடைந்ததற்கான காரணங்கள் என்னென்ன?
37. சோழர் காலத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனங்களை குறிப்பிடுக.
38. தீன் இலாஹி – பற்றி நீவீர் அறிவது யாது?
39. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு.
40. சுவாமி விவேகானந்தர்.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. அ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களை பற்றி விளக்குக. (அல்லது)
ஆ) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியத்துவங்களை விவரி.
42. அ) மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாக கட்டமைப்பை விவரிக்கவும். (அல்லது)
ஆ) குப்தர்கள் காலத்து வணிக குழுக்களின் பங்கை ஆய்வு செய்க.
43. அ) வட இந்தியாவின் நிலை குறித்து யுவான் சுவாங்கின் கருத்துக்கள் யாவை? (அல்லது)
ஆ) பெரோஸ் துக்ளக்கின் ஆட்சியை மதிப்பீடு செய்க.
44. அ) சோழர்கால கட்டுமான கலையின் சிறப்புகளை எழுதுக. (அல்லது)
ஆ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.
45. அ) நவீன கல்விமுறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கினை விளக்குக. (அல்லது)
ஆ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப்படைத் திட்டத்தினை பற்றி விவரி.
46. அ) 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களையும் மற்றும் விளைவுகளையும் விவரிக்கவும்.
(அல்லது)
ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்.
அ) காந்தாரம் ஆ) கிர்னார் இ) பாடலிபுத்திரம் ஈ) காஞ்சி உ) கலிங்கம்
47. அ) தமிழ்நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்களை எடுத்துக்காட்டுக. (அல்லது)
ஆ) அக்பருடன் தொடர்புடைய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தை காலக்கோட்டில் அமைக்கவும்.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com